1974 ஏப்ரல் 17]

திரு. த. சோனேயா : திருபுவனம் மைல் ஒன்று இரண்டு பர்லாங்கில் இருக்கிற சுமார் 2 பர்லாங்க் ரோடு போடுவதற்கு ரூ. 37,000 செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருப்பதாகச் சொல்கிறுர்கள். அரசாங்கத்திற்கு ரூ. 37,000 என்பது ஒரு பெரிய தொகை அல்ல. அதனுல் விவசாயப் பெருங்குடி மக்கள் பெரிய பலனை அடையப்போகிறுர்கள். அந்தப் பகுதி மக்களுக்கு ஏற்கனவே இருந்த அரசு கொடுத்திருந்த வாக்குறுதி நிறைவேற்றப் படாமல் ஏமாற்றமடைந்திருக்கிற மக்களுக்கு அந்த ஏமாற்றத்தைப் போக்குவதற்கு வேண்டி இந்த அரசு மீண்டும் ஒரு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : சாலை அமைப்பதற்கு மட்டும் ரூ. 37,000 என்று சொன்னேன். நில ஆர்ஜிதம் செய்வதற்கு விலை மதிப்புள்ள நிலம் என்று குறிப்பிட்டேன். அதனுடைய கிரயத்தை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை என்று கருதுகிறேன். அரசு ஏதோ உறுதி அளித்திருப்பதாகச் சொன்னுர்கள். நிச்சயம் அரசு அம்மாதிரி உறுதி அளிக்கவில்லை என்றுதான் தெரியவருகிறது. அங்கத்தினர் அம்மாதிரி உறுதி அளித்திருந்தால் அதற்கு அரசு பொறுப்பு அல்ல.

Power from Maharashtra State

*851 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether it is a fact that the Maharashtra State has offered to supply power to this State in exchange for yarn from this State to them; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தற்சமயம் இல்லை. ஆனுல் சென்ற ஆண்டில் 46.35 லட்சம் யூனிட்கள் வழங்கப்பட்டன.

திரு. நா. வீராசாமி : கடந்த ஆண்டு கொடுத்ததாகச் சொன்னுர்கள். இப்பொழுது நம்முடைய நாட்டில் மின்சாரப் பற்றுக்குறை இருக்கிறது. நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் சமீபத்தில் மகாராஷ்டிரா சென்றிருந்த நேரத்தில் விருந்துக்கு அழைத்து இட்லி எல்லாம் கொடுத்து அரிசி கேட்டதாகச் சொன்னுர்கள். அப்பொழுது முதல் அமைச்சர் அதற்குப் பதிலாக

உரம் கொடுத்தால் நாம் இதைக் கவனிப்பதாகச் சொன்னார்கள். எனவே நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் மின்சாரத்தைக் கொஞ்சம் அதிகமாக அவர்கள் கொடுத்தால் நாம் அரிசி கொடுப்பது பற்றி பரிசீலிக்கலாம் என்று மகராஷ்டிரா அரசோடு தொடர்பு கொள்ள ஏதாவது நடவடிக்கை எடுத்திருக் கிறார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நண்பர் வீராசாமி அவர்கள் சொன்னதிலே மராட்டிய முதல்வர் வீட்டில் விருந்து அருந்தியது உண்மை. மற்றவைகள் கற்பனை.

திரு. எம். சுரேந்திரன் : மகாராஷ்டிர மாநிலத்துக்கு நூல் அளிப்பதன் மூலம் நமக்கு மின்சாரம் கிடைக்கும் என்ற முறை யில் இந்தக் கேள்வி அமைந்திருக்கிறது. ஒவ்வொரு மாநிலத் திலும் ஒவ்வொரு பொருள் பற்றாக்குறை இருக்கிறது. ஆகவே. மற்ற மாநிலங்களிலிருந்து அதிகமாக இருக்கிற பொருள்களை வாங்குவதற்கான முறையில் மத்திய அரசோடு பேசி அதற்கான ஒரு ஏற்பாடு செய்வதன் மூலம் இம்மாதிரியான கஷ்டங்களைப் போக்குவதற்கான வழி இருக்குமே? அம்மாதிரியான காரியங்களைச் செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : எந்த மாநிலத்தில் எஞ்சிய மின்சாரம் இருக்கிறதோ அதை வாங்குவதற்குத் தயாராக இருக் கிறோம். ஆனால் தற்சமயம் கேரளாவைத் தவிர மற்ற மாநிலங்கள் கொடுக்கின்ற நிலையில் இல்லை, அங்கு எல்லாம் மின்சார வெட்டு இருக்கிற காரணத்தினால்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மின்சாரத்தைப் பெறுவதற்கு மகாராஷ்டிர அரசோடு நடப்பு ஆண்டில் பேச்சுவார்த்தை இனி மேலாவது ஏதாவது நடத்துவதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அதைத்தான் சொன்னேன். யார் கொடுத்தாலும் வாங்குவதற்குத் தயாராக இருக்கிறோம். ஆனால் அவர்களுடைய நிலைமை சில இடங்களில் சிக்கலாக இருக் கிறது. இப்பொழுது கொடுக்கிற நிலையில் கேரள அரசாங்கத் தைத் தவிர வேறு மாநிலம் இல்லை. தொடர்பு வைத்துகொண் டிருக்கிறோம். அவர்களும் நெருக்கடி என்று சொல்லிக்கொண் டிருக்கிறார்கள்.

1974 ஏப்ரல் 17]

திரு. எஸ். வடிவேல் : இந்த மாநிலத்திலிருந்து எந்த மாநிலத்திற்கு நூல் அனுப்புகிறார்கள்? நூலுக்குப் பதிலாக நாம் பணம் வாங்குகிறோமா அல்லது வேறு என்ன பொருளை வாங்கிக் கொள்கிறோம் என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இந்தப் பிரச்னை இப்பொழுது எழவில்லை. சென்ற ஆண்டு 60 கவுண்டு நூல் வழங்க வேண்டும் என்று அவர்கள் கொடுக்கின்ற மின்சாரத்திற்கு பரிமாற்றம் செய்து கொள்கிற ஒரு தற்காலிக ஏற்பாடு. அது சில நாட்களுக்குள் முடிந்துவிட்டது. இப்பொழுது அப்படி ஒரு ஏற்பாடும் இல்லை.

வெள்ளிக்குறியிடாத வினாக்கள் @

பதிவான தொழிற் சங்கங்களுக்கு வழக்காட உதவிப் பணம்

11. **வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தொழிலாளர் ஆணையாளரால் (Commissioner of Labour) 1972-73 நிதியாண்டிலும், 1973-74 நிதியாண்டில் நாளது தேதி வரை எந்தெந்த (**Trade Union** -க்கு உயர்நீதி மன்றத்தில் வழக்காட உதவிப் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது?

விடை.—பதிவான தொழிற் சங்கங்கள், சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடருவதற்காக அவற்றுக்கு ரிட் மனு ஒன்றுக்கு அல்லது ரிட் மேல் முறையீடு ஒன்றுக்கு, ரூ. 150 என்ற வீதத்தில் வழக்காடுவதற்கான நிதி உதவி வழங்க தொழிலாளர் நல-வேலை வாய்ப்புத் துறையின் 22—5—1972 ஆம் நாளிட்ட 784 ஆம் எண் அரசாணையில் அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்த உதவித் தொகைக்கு ஒப்பளிப்பு வழங்குவதற்கான அதிகாரத்தைச் செலுத்த தொழிலாளர் நல ஆணையாளர் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளார்.

@ 16—4—1974-ம் நாளன்று பேரவை முன் வைக்கப்பட்டவை.